மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.2 சசிக்குமார்

06.06.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :– எனக்கு சொந்த ஊர் மடத்துக்குளம் வேடபட்டி என்றால் சரிதான். நான் 2020ம் வருடம் ஜனவரி மாதம் முதல் அத்திமரத்துவலசு என்ற பகுதியில் செயல்பட்டுவரும் சாந்தி பீட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற கோழி இறைச்சி நிறுவனத்தில் கழிவு சுத்திகரிக்கும் வேலை செய்து வருகிறேன். நான் 2020க்கு முன்பு அத்திமரத்துவலசுக்கு வந்தது இல்லை என்றால் சரிதான். கிழமேல் ரோட்டிலிருந்து நேர் தெற்காக வண்டிப்பாதை ஒன்று வந்து மேற்காக செல்கிறது என்றால் சரிதான். அந்த வண்டிப்பாதைக்கு அடியில் பைப் லைன் செல்கிறது என்றால் சரிதான். அந்த பைப் லைனில் தண்ணீர் செல்கிறது என்றால் சரிதான். நிலவாய்க்கால் எந்த சர்வே எண்ணிலிருந்து எந்த சர்வே எண் நோக்கி செல்கிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எந்த சர்வே எண்ணில் இருந்த வாய்க்கால் அழிக்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. ஆனால் வாய்க்கால் அழிக்கப்பட்டது தெரியும். நான் வாய்க்கால் அழித்ததை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. வாய்க்கால் ஒன்று இருந்த விபரத்தை வாதி ஆறுமுகம் சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. நானே பார்த்துள்ளேன். எனக்கு வழக்கு விபரம் பற்றி எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2024.06.06 17:33:48 +0530

District Munsif,

Palani.